www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2024

## எட்டாம் வகுப்பு

நேரம்: 1.30 மணி அறிவியல் மதிப்பெண்கள்: 50

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:-** 10×1=10

1) கீழ்க்கண்டவற்றுள் எது ஆங்கிலேய அலகு முறை ______
அ) CGS ஆ) MKS இ) FPS ஈ) SI

2) வெப்பநிலையின் SI அலகு ______
அ) செல்சியஸ் ஆ) ஃபாரன்ஹீட் இ) கெல்வின் ஈ) ஆம்பியர்

3) அழுத்தத்தின் அலகு ______
அ) பாஸ்கல் ஆ) $Nm^{-2}$ இ) பாய்ஸ் ஈ) அ மற்றும் ஆ

4) வெப்பநிலைமானிகளில் பயன்படுத்தப்படும் திரவ உலோகம் ______
அ) தாமிரம் ஆ) பாதரசம் இ) வெள்ளி ஈ) தங்கம்

5) கரிக்கோலின் (பென்சிலின்) நடுத்தண்டில் இருப்பது ______
அ) கிராஃபைட் ஆ) வைரம் இ) கார்பன் ஈ) அலுமினியம்

6) ______ உலோகம் துருப்பிடித்தலுக்கு உள்ளாகிறது
அ) வெள்ளீயம் ஆ) சோடியம் இ) காப்பர் ஈ) இரும்பு

7) உயிருள்ள மற்றும் உயிரற்றவைகளின் பண்புகளைப் பெற்றவை ______
அ) வைரஸ் ஆ) பாக்டீரியா இ) பூஞ்சை ஈ) புரோட்டோசோவா

8) ______ ஒரு புரோகேரியாட்டிக் நுண்ணுயிரியாகும்
அ) வைரஸ் ஆ) பாக்டீரியா இ) பூஞ்சை ஈ) ஆல்கா

9) உண்ணத் தகுந்த காளான் ______
அ) பாலிபோரஸ் ஆ) அகாரிகஸ் இ) பெனிசிலியம் ஈ) அல்பர்ஜில்லஸ்

10) முதலாவது நிலத் தாவரங்கள் ______
அ) பிரையோஃபைட்டுகள் ஆ) டெரிடோஃபைட்டுகள்
இ) ஜிம்னோஸ்பெர்ம்கள் ஈ) ஆஞ்சியோஸ்பெர்ம்கள்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** 5×1=5

11) ஒரு மோல் என்பது ______ அணுக்கள் அல்லது மூலக்கூறுகளைக் கொண்டுள்ளது.

12) ஆழம் அதிகரிக்கும் போது திரவ அழுத்தம் ______

13) ______ குறை கடத்தியாகப் பயன்படுகிறது.

14) நுண்ணுயிரிகளை ______ ன் உதவியுடன் காண முடியும்.

15) 'வகைப்பாட்டியல்' என்ற சொல் ______ மொழியிலிருந்து பெறப்பட்டது.

**III. எவையேனும் 10 வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி:-** 10×2=20

16) காட்சிப்படுத்துதலின் அடிப்படையில் அமைந்த கடிகாரங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

17) வெப்பநிலையை அளவிடப் பயன்படும் அலகுகளைக் கூறுக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



18) ஒப்பிட்டு விடை தருக.

நூலில் போடப்பட்டுள்ள முடிச்சு : ________ உராய்வு ::

பந்து தாங்கிகள் : ________ உராய்வு.

19) திரவ அழுத்தத்தை அளவிட உதவும் இரு கருவிகளின் பெயர்களைக் கூறுக.

20) அதிக எடையைச் சுமக்க உதவும் பைகளின் பட்டைகள் அகலமாக அமைக்கப்படுவது ஏன்?

21) பின்வரும் சேர்மங்களில் உள்ள தனிமங்களின் பெயர்களையும் அவற்றின் குறியீடுகளையும் எழுதுக.

அ) கார்பன் மோனாக்ஸைடு ஆ) சலவை சோடா

22) உலோகப் போலிகளுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

23) வேதிவினை என்பதை வரையறு.

24) சரியா/தவறா? தவறான வாக்கியத்தை திருத்தி எழுதுக:

அ) பெண் அனோபியஸ் கொசுக்கள் டெங்கு வைரஸ் கிருமிகளைப் பரப்புகின்றன

ஆ) ஈஸ்ட் அதிக அளவில் ஆல்கஹாலை உற்பத்தி செய்யப் பயன்படுகிறது.

25) ஏதாவது மூன்று புரோட்டோசோவாக்களின் பெயர்களை எழுதுக.

26) எதிர் உயிர்க்கொல்லி என்றால் என்ன?

27) பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) நைட்ரஜனை நிலைப்படுத்தும் பாக்டீரியா | - | லேக்டோ பேசில்லஸ் அசிடோபிலஸ் |
| ஆ) குரு | - | ரைசோபியம் |
| இ) புரோபயாட்டிக்ஸ் | - | தடுப்பூசி |
| ஈ) எட்வர்ட் ஜென்னர் | - | பிரியான் |

28) இருசொற் பெயரிடு முறை என்பது என்ன? எடுத்துக்காட்டு தருக.

29) இருவிதையிலைத் தாவரங்களின் இரு பண்புகளை எழுதுக.

30) பூஞ்சைகளின் ஏதேனும் இரு பொருளாதார முக்கியத்துவத்தை எழுதுக.

**IV. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விரிவாக விடையளி:- 3×5=15**

31) அடிப்படை அளவுகளை அவற்றின் அலகுகளுடன் பட்டியலிடுக.

32) உராய்வை வரையறு. அன்றாட வாழ்வில் உராய்வின் பயன்பாட்டிற்கு இரு உதாரணம் தருக.

33) உலோகங்களுக்கும், அலோகங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுள் ஏதேனும் நான்கினை அட்டவணைப்படுத்துக.

34) வடிவத்தின் அடிப்படையில் நான்கு வகையான பாக்டீரியாக்களின் பெயர்களை எழுதுக.

35) பாசிகளுக்கும், பூஞ்சைகளுக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

********

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com